பக்கங்கள் - 18

# காலை முரசு



## யானை தாக்கி வயோதிபர் பலி

### திருமலையில் சோகம்

யானை தாக்கியதில் வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 22 வெள்ளிக்கிழமை 08.09.2023 அதிர்வு 38

# ராஜபக்ஷக்களின் பாதுகாவலனே சுரேஷ் சலே; சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும்

### நாடாளுமன்றில் முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா வலியுறுத்து



”உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புபட்ட புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சலே ராஜபக்ஷக்களின் குடும்பப் பாதுகாவலன் என்பதால் சனல் 4 வெளியிட்டுள்ள காணொலி குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடான விசாரணைகள் எப்படி நடத்தப்படும் என்பது எமக்குத் தெரியும். 04▶



## நாடாளுமன்றில் மீண்டும் பலத்தை நிரூபித்த அரசு

### உள்நாட்டு இறைவரி சட்டமூலம் நிறைவேற்றம்



நாடாளுமன்றத்தில் உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம் மேலதிக பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு நேற்று மாலை சபையில் நடைபெற்றது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 103 வாக்குகளும், எதிராக 58 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்பிரகாரம் உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம் 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

# சர்வதேச விசாரணைக்கு அரசு எந்நேரமும் தயாராம்

### இப்படி உறுதியளிக்கிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ



**“உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச விசாரணைக்கும் அரசு எந்நேரமும் தயார். அத்துடன் சனல் 4 வீடியோவில் வெளியிடப்பட்டவாறு சம்பவம் நடந்திருந்தால் அது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படும்.”**

**- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.** 04▶

# இறுதிப் போரில் இராணுவத்திடம் சரணடைந்த போராளிகளின் மனித எச்சங்களே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில்

### தடயப்பொருள்கள் அதையே உணர்த்துகின்றன என்கிறார் ரவிகரன்

”முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருப்பவை 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த முன்னாள் போராளிகளின் மனித எச்சங்களே. இந்த மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்படுகின்ற உடைகள், 04▶



# ‘சனல் 4’ இற்கு எதிராக கொழும்பில் போராட்டம்

### பிரிட்டன் தூதரகத்துக்கு முன்னால் கோரிக்கைக் கடிதமும் கையளிப்பு

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சனல் 4 ஆவணப்படத்துக்கு எதிராகவும், அந்தத் தொலைக்காட்சிக்கு எதிராகவும் அதிகாரிகள் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி 05▶



## இரகசியம்



முதலில் வாசகர்களுக்கு நண்பர் ஒருவர் மூலம் கிடைத்த தகவலைப் பரிமாற விரும்புகிறேன்.

‘சுப்பர் ஸ்டார்’ ரஜினிகாந்த் ரசிகர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி அது. அவர் இம்மாத இறுதியில் – 03▶



# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அடுத்த வாரம் கியூபா செல்கிறார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் கியூபாவிற்கு பயணிக்க வுள்ளார்.

“ஜி 77 குழு மற்றும் சீனா“ உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் கியூபா செல்லவுள்ளார்.

“தற்போதைய அபிவிருத்தி சவால்களில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் பங்கு” எனும் தலைப்பில் “ஜி77 மற்றும் சீனா“ அரச தலைவர்கள் மாநாடு எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கியூபாவின் ஹவானாவில் நடைபெறவுள்ளது.

கியூபா ஜனாதிபதி விடுத்த உத்தியோகபூர்வ அழைப்பையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரம்சிங்க இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இந்த அரசுத் தலைவர் உச்சி மாநாட்டுடன் இணைந்ததாக இலங்கை மற்றும் கியூபாவிற்கிடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் நோக்கில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் கியூபா ஜனாதிபதிக்கும் இடையில் பேச்சும் இடம்பெறவுள்ளது.

“ஜி 77 மற்றும் சீனா“ நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுக்கு அமைய, வளர்ச்சியடைந்து வரும் 134 நாடுகளை உள்ளடக்கிய மிகப்பெரும் அரசுகளின் குழுவாக கருதப்படுகிறது.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் மேம்பட்ட ஒத்துழைப்பை உருவாக்க தென் பிராந்திய நாடுகளில் மறுசீரமைப்புகள் மற்றும் புதிய அணுகுமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களை வழங்கும் ‘ஹவானா பிரகடனத்தை’ அரச தலைவர்கள் இந்த உச்சி மாநாட்டில் நிறைவேற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவும் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் பங்கேற்கவுள்ளனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# நாட்டின் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்



நாட்டில் தொடர்ந்தும் மழையுடனான வானிலை நீடிக்குமாயின் களு, நில்வளா, கிங் மற்றும் அத்தனகலு ஓயாவை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயமுள்ளது என நீர்ப்பாசன திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் இருக்கவேண்டும் என இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையால் 5 மாவட்டங்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் தொடர்ந்தும் மழையுடனான வானிலை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மாத்தறை, புத்தளம், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் 100 மில்லிமீட்டர் வரை மழை பெய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பஸ்ஸை வழிமறித்துச் சூடு பெண்ணொருவர் படுகாயம்

## அம்பலாந்தோட்டையில் பயங்கரம்

பஸ்ஸுக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அம்பலாந்தோட்டை – கொக்கல்ல பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

அந்தப் பெண் பயணித்த பஸ்ஸை வழிமறித்த இருவர், துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் 47 வயதான பெண்ணே படுகாயமடைந்துள்ளார்.

அவர் அம்பலாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொக்கல்ல பகுதியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரின் தாயே நேற்றைய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

---

**இரகசியம் பரகசியம்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும் 30 ஆம் திகதி – கொழும்பு வருகின்றார்.

கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இரண்டு பொது நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றார் என்று கூறப்பட்டது.

“சுப்பர் ஸ்டார் என்பதால் மக்கள் கூட்டம் அலைமோதும், டிக்கெட் நிகழ்ச்சியை எங்கு நடத்தப் போகின்றார்கள், மண்டபங்களில் தள்ளுமுள்ளு ஏற்படுமே....!” – என்றேன்.

“அதுதான் இலகுவான வழி கண்டு பிடித்துள்ளார்கள். கொழும்பில் துறைமுக நகரிலாம் நிகழ்ச்சி. துறைமுக நகருக்குள் நுழையும் இடத்திலேயே நுழைவுக் கட்டணம், டிக்கெட் விவகாரங்களை எல்லாம் முடித்து விட்டார்கள் என்றால் உள்ளே திறந்த வெளியில் கூட நிகழ்ச்சியை நடத்தலாம். தள்ளுமுள்ளுக்கு இடம் இருக்காது” – என்றார் என் நண்பர்.

ஒரு விடயம் இடித்தது. தென்னிந்திய சுப்பர் ஸ்டார் அவர். சீனாவின் கைங்கரியமாக திகழும் துறைமுக நகரில் நிகழ்வில் பங்குபற்றலாமா என்று இந்திய அபிமானிகள் எவரும் கேள்வி எழுப்ப விட்டால் சரி.

யாழ்ப்பாணத்தில் எந்தத் துறைமுக நகருக்குப் போவார்கள்? தெரியவில்லை.

எது, எப்படியோ நல்லூர் தேர்த் திருவிழா முடிய, இன்னொரு திருவிழா யாழ்ப்பாணத்திலும் களை கட்டும் என்று நம்பலாம்.

என்ன நிகழ்ச்சிக்கு வருகின்றார் என்று உறுதியாகத் தெரியவில்லை. விடயம் மலிந்தால் சந்தைக்கு – சந்திக்கு – வரும்தானே....அப்போது பார்த்துக்கொள்வோம்..!

* * *

‘சனல்-4’ விடயத்தினால் பாதுகாப்பு வட்டாரங்கள், அரசியல் தலைவர்களுக்கு வயிற்றை கலக்கும் பெரும் பிரச்சினை என்றால் இன்னொரு தரப்புக்கும் தலையிடியோ தலையிடி. வெளியே பேசாமல் கமுக்கமாக இருக்க வேண்டிய இக்கட்டு.

ஆஸாத் மௌலானாவின் ‘சனல்-4’ இல் வராத ஓடியோ பேட்டிகள், வாக்குமூலப் பதிவுகள் எனச் சில விடயங்களும் இப்போது உலா வரத் தொடங்கி இருக்கின்றன.

அவற்றில், வெளியே வர முடியாத விளக்கமறியலில் இருந்த பிள்ளையான் வெளியில் வந்ததிலும், சுதந்திரப் பறவையானதிலும் பல தில்லுமுல்லுகள் இடம் பெற்றன என்று விலாவாரியாக சில நீதித்துறை அலுவலர்களின் பெயர்களுடன் விவரங்கள் அடிபடுகின்றன.

‘சனல்-4’ இல் இராணுவப் புலனாய்வு அதிகாரி சுரேஷ் சலே போல நீதித் துறையிலும் சிலரின் பெயர்கள், அவர்களின் செயற்பாட்டு விவரங்கள், நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் வெளிவரத் தொடங்கி இருக்கின்றன.

சர்வதேச அமைப்புக்கள் சில, நீதித்துறை சார்ந்த சர்வதேச பிரமுகர் மூலம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள், உத்தரவுகளை இலங்கைச் சட்டங்களின் அடிப்படையில் பரிசீலிக்க தலைப்பட்டிருக்கின்றன என்று தெரிகின்றது.

வழக்குகளுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகளின் கருத்து நிலைப்பாடுகளும் கேட்டறியப்படுகின்றனவாம்.

போகின்ற போக்கில் பாதுகாப்புத் துறையினர், அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்லாமல் நீதித்துறையினருக்கு எதிராகவும் – வெளியில் பகிரங்கமாக அறிவிக்கப்படாத – விசா மறுப்பு நடவடிக்கைகளை மேற்குலகம் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக முன்னெடுக்கலாம் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.

வெளியில் காட்டாமல் பல நீதித்துறையினர் – நம் மக்கள் – நடுக்கம் கண்டிருப்பர் என்று நம்பலாம்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ராஜபக்ஷக்களின்...**

எனவே, சர்வதேச விசாரணையே வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் கட்ட விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

"சனல்-4 வெளியிட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான காணொலி தற்போது நாட்டில் முக்கிய விடயமாகிவிட்டது. சனல் 4 வெளியிட்டுள்ள காணொலி தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரசு கூறுகின்றது. தெரிவுக்குழுக்கள் எவ்வாறு செயற்படும் என்பதை நாம் அறிவோம். ஆகவே, சனல் 4 வெளியிட்ட விடயங்களை நாடாளுமன்றத் தெரிவுகுழு ஊடாக விசாரணை செய்வது பயனற்றது. எனவே, சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

புலனாய்வுப் பிரிவின் பிரதானியான சுரேஷ் சலே தொடர்பில் சனல் 4 காணொலியில் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. இவர் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போது புலனாய்வுப் பிரிவில் இருந்து கொண்டு பொனிபஸ் பெரேரா என்பவருடன் ஒன்றிணைந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுரேஷ் சலே புலனாய்வுப் பிரிவில் அதிகாரம் படைத்தவராக்கப் பட்டார்.

புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சலே ராஜபக்ஷக்களின் பாதுகாவலன். அத்துடன் ராஜபக்ஷக்களின் வீட்டில் மலசலகூடம் சுத்தப்படுத்துபவர். எனவே, சனல் 4 வெளியிட்டுள்ள காணொலியைச் சாதாரணமாக ஒதுக்கிவிட முடியாது. அது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்." – என்றார்.

---

**யானை தாக்கி...**

இந்தச் சம்பவம் திருகோணமலை – மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் – பட்டித்திடல் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை ராசலிங்கம் (வயது 69) என்பவரே சாவடைந்துள்ளார்.

வீட்டை அண்மித்த பகுதியில் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த போது அந்த நபர் யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

---

**சர்வதேச...**

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள நேரத்தில், எமது நாட்டுக்கு எதிராகப் பல்வேறு அறிக்கைகளும் காணொளிகளும் வெளியிடப்படுகின்றன.

புலம்பெயர்ந்தோர் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் புலம்பெயர் தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளோம்.

அத்துடன் ஈஸ்டர் தாக்குதலுக்கு 29 மாதங்களுக்கு முன்னர் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றினேன்.

அப்போதிருந்த அரச ஊடகப் பேச்சாளர் உள்ளிட்டோர் என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கவே நான் இவ்வாறு கூறியதாக அவர்கள் கூறினர். இன்று எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிலர் இந்த விடயம் தொடர்பில் மிகுந்த ஆர்வத்துடன் பேசுகின்றனர். அன்று நான் அந்த அறிக்கையை வெளியிட்டபோது கூச்சல் போட்டவர்களே இவர்கள்.

அன்று நான் கூறி 29 மாதங்களுக்குப் பிறகு அனைவரின் கண்களும் திறக்கப்பட்டுள்ளன. அன்று எனது அறிக்கையை ஆராய்ந்திருந்தால் அந்த மக்கள் இன்றும் உயிருடன் இருந்திருப்பார்கள்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தான் ஓய்வுபெற்றுச் செல்லும்போதே கூறியிருந்தார். ஆனால், அவரிடம் இது தொடர்பில் வாக்குமூலம் பெறச் செல்லும்போது நீதிமன்றம் ஊடாக அதற்குத் தடையைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக தற்போது 42 வழக்குகள் உள்ளன. அதே போன்று தாக்குதல் தொடர்பாக உள்நாட்டில் அல்லாமல் சர்வதேச விசாரணையை நடத்த அரசு என்ற வகையில் நாங்கள் எந்நேரமும் தயாராக உள்ளோம். இன்று சர்வதேச விசாரணையைக் கோருபவர்கள் தாக்குதலின்போது அரசில் இருந்தனர்.

சனல் 4 என்பது புலம்பெயர் மக்களுடன் இணைந்து செயற்படும் ஒரு ஊடக அமைப்பாகும். அந்த ஊடகம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் இறந்த மக்களுக்கு நீதி வேண்டும் என்று கேட்கும் நேர்மையான எண்ணத்தில் இருக்கும் அமைப்பு அல்ல.

எவ்வாறாயினும் சனல் 4 ஒளிபரப்பிய வாறு சம்பவம் நடந்திருந்தால் அது தொடர்பில் ஆராயப்படும். இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படும்." – என்றார்.

---

**இறுதிப்போரில்...**

கண்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கலாமெனச் சந்தேகிக்கக்கூடிய துணிகள், துப்பாக்கிச் சன்னங்கள் உள்ளிட்ட தடயப் பொருள்கள் அதையே உணர்த்துகின்றன."

– இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இரண்டாம் நாள் அகழ்வாய்வுகளை அவதானித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இரண்டாம் நாள் அகழ்வுப் பணிகளின்போது துப்பாக்கிச் சன்னங்கள், துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த பெண்களுடைய ஆடைகள், கண்களுக்குக் கட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கக்கூடிய வகையிலான துணி என்பன தடயப் பொருள்களாக மீட்கப்பட்டுள்ளமையுடன், மனித எச்சங்களும் பகுதியளவில் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இங்கு இன்னும் பல மனித எச்சங்கள் இனங்காணப்படலாம் என்ற எதிர்ப்பார்ப்பே காணப்படுகின்றது.

இவற்றையெல்லாம் அவதானிக்கும்போது, கடந்த 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் போராளிகளை இங்கு கொண்டுவந்து கண்களைக் கட்டி, சித்திரவதைக்குட்படுத்தி, துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்து இங்கு புதைத்துள்ளார்கள் என்பதே எனது நிலைப்பாடாக இருக்கின்றது.

மேலும் கடந்த ஜூலை மாதம் 6ஆம் திகதி இந்தப் பகுதியில் முதற்கட்ட அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது, இந்த இடங்களில் புலனாய்வாளர்கள் உலாவுகின்றார்கள் என எம்மால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் கடந்த புதனன்று இங்கு முதல்நாள் அகழ்வுப் பணிகள் முடிவுறுத்தப்பட்டதன் பிற்பாடு, மனிதப் புதைகுழி வளாகம் பொலிஸாரின் பாதுகாப்பில் இருந்தபோது புலனாய்வாளர்கள் உள்நுழைந்து புகைப்படங்கள் எடுத்துள்ளனர். இங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் என்ன பார்த்துக்கொண்டிருந்தார்கள்? எனவேதான் நாம் இந்த அகழ்வுப் பணிகளில் சர்வதேசக் கண்காப்பைத் தொடர்ந்தும் கோரி வருகின்றோம்.

இவ்வாறு புலனாய்வாளர்களின் அத்துமீறல் செயற்பாடு இருந்தமையால்தான், இரண்டாவது நாள் அகழ்வுப் பணிகளில் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி முழுமையான அவதானத்தைச் செலுத்தியிருந்தமை அவதானிக்க முடிந்தது. அந்த வகையில் நாம் நீதிமன்றத்தை முழுமையாக நம்புகின்றோம்.

எனினும், குருந்தூர்மலை விவகாரத்தில் மூன்று முறை நீதிமன்றக் கட்டளையை மீறிய தொல்லியல் துறையினர் மீது எமக்கு அதிருப்தியிருக்கின்றது.

ஆகையினாலேயே யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தொல்லியல் பீடத்தினரை இந்த அகழ்வுப் பணிகளில் இணைத்துக்கொள்ளுமாறு கோருகின்றோம். இந்நிலையில் தமிழ் தொல்லியல் ஆய்வாளர் பரமு புஸ்பரட்ணம் மூன்றாம் நாள் (இன்று) அகழ்வாய்வுகளில் பங்கேற்பார் எனவும் அறியக்கூடியவாறுள்ளது.

மேலும், இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மைத்தன்மைகள் வெளிப்படவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு." – என்றார்.



# வன்னியில் மருந்தகங்களுக்கு அனுமதி மறுப்பு: மதுபானசாலைகளை அமைப்பதற்கு அனுமதி!

## வினோ நோகராதலிங்கம் சபையில் பகிரங்கம்

வன்னியில் புதிதாக மருந்தகங்களை அமைக்க அனுமதி வழங்குமாறு பலமுறை வலியுறுத்தப்பட்டும் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும், ஆனால், புதிதாகப் பல மதுபான சாலைகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது வினோ நோகராதலிங்கம் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் 20 ஆயிரம் வைத்தியர்களில் 1,500 பேர் நாட்டை விட்டு சென்றுள்ளனர். மேலும் 5,000 பேர் வெளிநாடு செல்லத் தயாராகி வருகின்றனர். ஆசிரியர்கள் பற்றாக்குறையால் பாடசாலைகள் மூடப்படுவதை போன்று வைத்தியசாலைகளும் மூடப்படுமா? என்று எண்ண வேண்டியுள்ளது. இவ்வாறு இவர்கள் வெளியேறிச் செல்ல அரசாங்கம்தான் காரணமென்றால் இதுவரையில் அரசாங்கம் ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கேட்கின்றேன்.

அண்மையில் யாழ். வைத்தியசாலையில் 8 வயது சிறுமியொருவரின் கை அகற்றப்பட்டுள்ளது. அவர் காய்ச்சலுக்காக சென்றவர். வைத்தியர்கள், தாதிகள் விரக்தியில் இருப்பதனாலேயே இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்றன. அரச வைத்தியசாலைக்கு நோயாளர்கள் செல்ல அஞ்சுகின்றனர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சுகாதார அமைச்சருக்காக மாத்திரமன்றி முழு அரசாங்கத்திற்கும் எதிராகவே கொண்டு வந்திருக்க வேண்டும்.

வன்னியில் மருந்தகங்களை அமைக்க சுகாதார தரப்பினரிடம் அனுமதி கோரியிருந்த போதும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. ஆனால் வன்னியில் புதிதாக மதுபான சாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.மதுபானசாலைகள் பலவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.

அரசாங்க கட்சியை சேர்ந்தவர்களுக்கு இது வழங்கப்படுகின்றதா என்பது பிரச்சினையில்லை. ஆனால் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் நேரத்தில் இவ்வாறு மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்குவது எதற்காக என்று கேட்கின்றேன்.

புதிதாக இவ்வாறு மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கி அவர்களின் ஆதரவை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கருதுகின்றோம். மக்களை படுகுழிக்குள் தள்ளிவிட்டு அரசியல்வாதிகளை மாத்திரம் முன்னேற்ற எடுக்கும் முயற்சிகள் மாற்றப்பட வேண்டும். இது மக்களுக்கான அரசாங்கமாக இருக்காது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித புதைகுழி தோண்டப்படுகிறது. சர்வதேச பரிமானங்களுக்கு அமைய அங்கு பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய புதைகுழி தோண்டப்பட்டாலும், நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதனை குருந்தூர் மலை விகாரை நிர்மாணிப்பு ஊடாக விளங்கிக் கொள்ள முடிகிறது. – என்று தெரிவித்துள்ளார்.

**‘சனல் - 4’...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய இயக்கத்தால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்துக்குக் கோரிக்கைக் கடிதம் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அங்குனுகல்லே ஸ்ரீவினாநந்த தேரர் –

”சனல் 4 ஆவணப்படம் இலங்கைப் புலனாய்வுப் பிரிவை இலக்கு வைத்து போலியான தகவல்களை வெளியிட்டுள்ளது. இந்தக் காணொளியில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் போலியானவை என்பதைக் கூட உறுதிப்படுத்தப்படாமலேயே வெளியிடப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பாதுகாப்புத் துறையின் பிரதானிகளுக்கும் தெரிவித்துள்ளமையோடு போலியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் இவ்வாறான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம்.

மேலும், போலித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு சுயாதீன நாட்டின் புலனாய்வுப் பிரிவினர் மீது சுமத்தப்பட்டுள்ள அடிப்படையற்ற குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரிட்டன் அரசையும் வலியுறுத்துகின்றோம்.

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை உள்ளடக்கியே கடிதத்தையே பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தில் கையளித்துள்ளோம்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆரம்பத்திலேயே அதிருப்தி

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நேற்று இரண்டாம் நாளாகத் தொடர்ந்திருக்கின்றது.

நேற்றைய அகழ்வின்போது ஒரு சில மேலதிக மனித எலும்புக்கூடுகள் இனம் காணப்பட்டுள்ளன. துப்பாக்கிச் சன்னங்கள் என்று சந்தேகப்படும் ஒரு சில உலோகத்துண்டுகளும் வேறு சில தடயப் பொருள்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அகழ்வுப் பணி இன்றும் தொடர இருக்கின்றது.

அந்தப் புதைகுழியில் இருப்பது இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் மனித எச்சங்களே, தடயப் பொருள்களும் அதனையே உணர்த்துகின்றன என்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராஜா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அவரது ஊகம் சரியா என்பது தொடர்ந்து நடைபெறப் போகின்ற அகழ்வு நடவடிக்கைகள், அதனைத் தொடரப் போகின்ற நிபுணத்துவ பரிசோதனைகள் மற்றும் நீதிமன்ற விசாரணைகள் போன்றவை மூலமே உறுதி செய்யப்பட முடியும்.

ஆனால் இலங்கையில் மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கை என்பது சில,பல பொது விடயங்களுக்காக அவ்வப்போது நியமிக்கப்படும் ஆணைக்குழு விவகாரத்தை ஒத்தது.

ஆணைக்குழு அமைக்கப்படும். நேரம், நிதி, மனித வளம் போன்றவற்றை விரயம் செய்து, ஆணைக்குழு அமர்வுகளை நடத்தும். விசாரணைகள் முன்னெடுக்கும், சில சமயங்களில் அறிக்கைகள் வரும். பல சமயங்களில் அவை வெளியே வராமலும் போகும். ஆனால் அந்த ஆணைக் குழுக்களினால் பெரும்பாலும் பயன் ஏதும் கிட்டுவதில்லை.

இலங்கையில் மனிதப் புதைகுழி அகழ்வு விவகாரமும் பல சமயங்களில் அப்படித்தான்.

வடக்கில் உள்நாட்டு யுத்தத்தை ஒட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கு, செம்மணி, மன்னார் போன்ற இடங்களிலும், இப்போது கொக்குத்தொடுவாயிலும் மனிதப் புதைகுழிகளின் அகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இடம்பெறுகின்றன. அவை எவற்றிலும் காத்திரமான முன்னேற்றமோ, முடிவுகளோ எட்டப்படவில்லை.

மன்னாரில் மட்டும் 110 பேருக்கும் மேற்பட்டோரின் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. யாழ். துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் செம்மணி மனிதப் புதைகளில் தலா ஒன்றை டசினுக்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அவை அகழ்ந்து எடுக்கப்பட்டன. அவ்வளவுதான். அதற்கு மேல் விடயம் ஏதும் நகரவில்லை. குறைந்தபட்சம் அவற்றின் மீதான நிபுணத்துவ பகுப்பாய்வு முழு அளவில் நடைபெற்றதாகவோ முடிவுகள் கண்டறியப்பட்டனவாகவோ தகவல் எதுவுமில்லை. எல்லாம் ஒரு கட்டத்தில் முழுமையாகக் கிணற்றில் போட்ட கல்லாகத் தூங்கிவிட்டன. தேங்கிவிட்டன.

1988 - 89 காலப்பகுதியில் தெற்கில் நடந்த அரச கிளர்ச்சியை ஒட்டி தெற்கிலும் சூரியகந்த, வனவாசல், மாத்தளை போன்ற இடங்களில் மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டன. சூரியகந்த புதைகுழி தொடர்பில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. உண்மைகள் ஓரளவு அம்பலமாகின.

ஆனால், வடக்கில் மனிதப் புதைகுழி அகழ்வு, வெறுமனே மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டமையுடன் தேக்கம் கண்டு விடுகின்றன. அந்த நிலைமையை மாற்றுவதற்காகத்தான் - உண்மைகளைக் கண்டறியும் நிலைமை வரை விடயங்களை முன்னேற்றுவதற்காகத்தான் - சர்வதேச கண்காணிப்பாளர்களின் பங்களிப்புடன் இந்த விடயம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்படுகின்றது. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்விலும் அது இடம்பெறாதமை இந்த அகழ்வுப் பணி தொடர்பிலும் ஆரம்பத்திலேயே அதிருப்தியை தந்து நிற்பது கண்கூடு.

## பல்கலைக்கழக விண்ணப்பம் ஏற்பு எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பம்!




2022 கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளல் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்க முடியுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.


பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டல் கையேடு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கையேட்டை பிரதேச மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட புத்தக விற்பனை நிலையங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட புத்தக விற்பனை நிலையங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வளாகம் மற்றும் அஞ்சல் மூலமும் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கமும் செய்ய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டல் கையேடு விற்பனை செய்யப்படும் புத்தக விற்பனை நிலையங்கள் தொடர்பில் அறிந்து கொள்ள ரபஉ.யஉ.டம எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த முறை தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் சுமார் 45 ஆயிரம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## உயர் தர பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்ய புதிய நடைமுறை




2022 கல்வி பொது தராதர உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இன்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒன்லைனில் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக https://onlineexams.gov.lk/eic எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது.

# நல்லூரான் 18 ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா 18ஆம்நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமேதராக முருகப்பெருமான் இடும்பன் வாகனத்தில் வீதியுலா வந்தார்.

படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்













# நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சியினருடன் கலந்தாய்வு

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

சர்வதேச நாணய நிதியம் தற்போதைய அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் நீண்ட நேர கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

இலங்கையானது சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் முன்னேற்றம் மற்றும் அரசாங்கம் விரைவில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் குறித்தான விடயங்கள் குறித்து இங்கு முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் அரசாங்கம் அனைத்து கடனாளிகளையும் நியாயமாக நடத்துவதுடன் அவதானம் செலுத்தப்பட வேண்டிய குழுக்களுக்கு விசேட கவனம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

நிலையானதொரு பொருளாதார நல்வாழ்வுக்கு, குறுகிய கால பொருளாதார குறிகாட்டிகளின் முன்னேற்றம் போலவே சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சிக் கோட்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டிய தேவையின் முக்கியத்துவமும் இங்கு முன்வைக்கப்பட்டது.

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் விசேட பிரதிநிதிகள் குழுவின் விஜயத்தில்,இந்நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி குழுக்களுக்கு இடையில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் இங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் லக்ஷ்மன் கிரியெல்ல,எரான் விக்கிரமரத்ன, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாலக கொடஹேவா மற்றும் கபீர் ஹாசிம் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று பிரசன்னமாகியிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி திருமதி சர்வற் ஜஹான், பொருளாதார ஆய்வாளரும்,சர்வதேச நாணய நிதியத்தின் இந்நாட்டு நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவுமான திருமதி மணாவி அபேவிக்ரம ஆகியோர் கலந்து கொண்டனர்.





# குத்துச் சண்டைப் போட்டியில் கண்டி சில்வெஸ்டர்ஸ் சம்பியன்

(அபு ஷைரீன்)

52 ஆவது டி.பி.ஜாயா ஞாபகார்த்த அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச் சண்டைப் போட்டியில் கண்டி புனித சில்வெஸ்டர்ஸ் கல்லூரி சம்பியனானது.

கடந்த ஐந்து தினங்களாக கண்டி, அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலை வளாகத்தில் இடம்பெற்ற இப்போட்டிகளின் இறுதிப் போட்டியில் கண்டி சில்வெஸ்டர்ஸ் சம்பியனைத் தனதாக்கியது.

போட்டிகளின் பரிசளிப்பு வைபவத்தில் அகில இலங்கை குத்துச் சண்டை சம்மேளனத்தின் உப தலைவர் விதான வசந்த உதயகுமார கலந்து கொண்டார். இப்போட்டித் தொடரில் 24 பிரிவுகளில் 262 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இறுதிப் போட்டியில் 2 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று கடுகண்ணாவ தேசிய பாடசாலை மூன்றாம் இடத்தையும், 3 தங்கம், 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று பேராதெனிய மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

கண்டி புனித சில்வெஸ்டர்ஸ் கல்லூரி 3 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கம் என்பவற்றைப் பெற்றுச் சம்பியனானது.







# கடல் வள பாதுகாப்பு செயலமர்வு பூநகரியில்

(அ.அஸ்வர்)

மெரிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் "கடல் வளங்களை பேண்தகு முறையில் பாதுகாத்தல்" எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு செயற்றிட்டமும் பயிற்சி செயலமர்வும் நேற்று (06) புதன்கிழமை பூநகரி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றன.

சர்வதேச கடற்கரையோர சுத்திகரிப்பு வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், கடல் வளத்தைப் பாதுகாக்கும் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடற் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோ கத்தர்களால் இவ் விழிப்புணர்வு செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் பூநகரி பிரதேச சபைச் செயலாளர் தயாபரன், மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன், பூநகரி கடற்றொழிற் சங்கச் சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், பூநகரிப் பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், மெசிடோ நிறுவன உத்தியோகத்தர்கள், கரையோர பாதுகாப்பு அதிகாரிகள், கடற்றொழிற் சங்க அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பொருத்தமற்ற இடங்களுக்கு 'பியர்' உரிமப் பத்திரங்கள்

## அரசின் செயற்பாடு தொடர்பில் எதிர்க்கட்சி விசனம்

சில பகுதிகளில் புதிதாக மதுபானக் கடைகள் அமைக்கப்பட்டதால், அப்பகுதி மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர். விகாரைகள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகாமையில் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதால் சிறார்களும் மதுவுக்கு பலியாகும் அபாயம் எழுந்துள்ளது.

சுற்றுலாத் தொழில் செயல்படாத பிரதேசங்களிலும் இந்த பியர் உரிம பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத் தேர்தலுக்காகப் பணம் தேடுவதற்கு அரசால் வழங்கப்பட்ட உரிமப் பத்திரம் என்பதை இது காட்டுகிறது. இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி தொகை கணக்கெடுப்பை நடத்தவுள்ளது. அரசால் உத்தியோக பூர்வமாக இது குறித்த தகவல் அறிவிக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இன்று (07) நாடாளுமன்றத்தில் கீழ் பியர் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

இலங்கையில் கடந்த காலங்களில் பெரும் எண்ணிக்கையிலான மதுபானக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்கிறோம் என்ற போர்வையில் தற்போதைய அரசு மதுபான உரிம பத்திரங்களை தனது நண்பர்களுக்கு விற்பனை செய்வதாக சந்தேகம் எழுந்துள்ளது.

மக்கள் மது அருந்தும் பழக்கத்துக்கு அதிகமாக ஆளாவது, நல்லொழுக்கமுள்ள சமுதாயத்துக்குத் தடையாக உள்ளது. இவ்வாறான நிலை உருவாகாமல் பார்த்துக் கொள்வது அரசின் பொறுப்பு. இவை தொடர்பில் நடவடிக்கை எடுக்காது போனால் பொது மக்களுக்கு இடையூறுகள் கூட ஏற்படலாம். தனது அரசியல் நண்பர்களுக்கு அரசு பியர் உரிமம் அல்லது மதுபான அனும திப்பத்திரம் வழங்குவதால் பல பகுதி களில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

சுற்றுலாத் தொழில் செயல்படாத பிரதேசங்களிலும் இந்த பியர் உரிம பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத் தேர்தலுக்காகப் பணம் தேடுவதற்கு அரசால் வழங்கப்பட்ட உரிமப் பத்திரம் என்பதை இது காட்டுகிறது. இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி தொகை கணக்கெடுப்பை நடத்தவுள்ளது. அரசால் உத்தியோக பூர்வமாக இது குறித்த தகவல் அறிவிக்கப்பட வேண்டும்.

நாட்டில் போலியான பாதுகாப்பு ஸ்டிக்கர்களை ஒட்டி மதுபானம் விற்பனை செய்யும் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. சுமார் 100 மதுபானக் கடைகளில் இருந்து சுமார் 100,000 மதுபானங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. தற்போது ராஜகிரியில் உள்ள கலால் திணைக்கள கட்டடத்தில் போத்தல்களைப் பதுக்கி வைத்து, போலி ஸ்டிக்கர்களுக்கு பதிலாக உண்மையான ஸ்டிக்கர்களை ஒட்டி பிரச்சினைகளை மறைக்கப் பெரும் சதி நடந்து வருகிறது.

இவ்வாறு, பாதுகாப்பு ஸ்டிக்கர்களை தவறாக அச்சிடுவது கூட்டு சதி. இதற்கு குற்றவியல் சட்டத்தின் மூலம் தண்டனை வழங்க வேண்டும். இது ஒரு ஆபத்தான பிரச்சினை. இதனைச் சாதாரணமாகத் தீர்த்து வைக்க முடியாது.

இந்த மோசடிகளை மூடிமறைப்பதற்கு நிறுவனங்களின் பிரதானிகள் உட்பட சில அரச அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர்.

இது நாட்டின் வருமான வரிவருவாயில் குறைவை ஏற்படுத்துகிறது. மதுபானம் கடத்தலை பிர பலப்படுத்த வேண்டாம். அதனைத் தடுத்து உழைக்கும் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிகளை குறையுங் கள்.– என்றார்.

# அந்தரத்தில்...



(பௌசுல் றிபாஸ்)

பொத்துவில் பிரதேச சபைக்கு உட்பட்ட பசறிச்சேனை விளையாட்டு மைதானத்தின் பார்வையாளர் அரங்கு கீழே விழும் நிலையில் காணப்படுகிறது.

பொத்துவில் பசறிச்சேனை பிரதேசத்தில் இருக்கும் இளைஞர்கள் மாலை நேர விளையாட்டுக்காக இந்த மைதானத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

இங்கு காணப்படும பார்வையாளர் மண்டபத்தின் ஒரு பகுதி மிக நீண்ட நாள்களாகக் கீழேவிழும் நிலையில் காணப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் உடன் கவனம் செலுத்தி அதனைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்களும், இளைஞர்களும், விளையாட்டுக் கழகத்தினரும் கேட்டுள்ளனர்.

# புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலய மாணவர்களுக்குப் பாராட்டு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பெரிய நீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் மூன்று மாணவர்கள் மூன்று பாடங்களிலும் "ஏ" தர சித்தியை பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டியுள்ளனர்.

அத்துடன் இந்தப் பாடசாலையில் இருந்து இம்முறை 9 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் வாய்ப்பைப் பெறுவார்கள் என்று பாடசாலையின் அதிபர் ஏ. முஹம்மட் அன்சார் தெரிவித்துள்ளார்.

பி.எப்.நூஸ்பிஹா (3ஏ), என். எப். நசீதா (3ஏ), ஏ.எப். ஹிமா (3ஏ), எம்.ஆர். நதீறா (ஏ2பி), எ.ஜி.எப்.நிஷா (3பி), ஏ.கே. எப்.அப்றா (2ஏசி), எஸ்.எஸ்.எம்.எஸ். பாத்திமா சுஹா (ஏ2சி), ஜெ. முகம்மட் அப்றார் (2பிசி).

# விபுலானந்தா மாணவர் கௌரவிப்பு



( வி.ரி. சகாதேவராஜா)

உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவர்கள் பாடசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

மருத்துவத்துறைக்குத் தெரிவான எம்.குவேந்திரன்-3ஏ, ஜி.அக்ஷயி - 3ஏ, பொறியியல் துறைக்குத் தெரிவான ஏஸ்.கிதுஷாந்த - 3ஏ, பி.அனோஜா - ஏ, 2பி, ஐ.திலக்ஷினி - 3பி ஆகியோர் இந்த சந்திப்பில் கொரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் எம்.சுந்தரராஜன், கணிதவிஞ்ஞான துறை பகுதித் தலைவர் ஆசிரியர் பி.கேதீஸ் ஆகியோர் மாணவர்களைக் கௌரவித்தனர்.



# நிந்தவூரில் மாணவிக்குக் கௌரவம்

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாட சாலையில் இருந்து மருத்துவபீடத்துக்குத் தெரிவாகியுள்ள மாணவி குண சேகரம் ஜனுசிகாவை பாராட்டி கௌர விக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (06) இடம் பெற்றது

நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவர் ஐ. எம். நிஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் ரீ.கலையரசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண் டார். கௌரவ விருந்தினர்களாக நிந்தவூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் எம் சரி புத்தீன், நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர், பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலா ளர் ஏ.புஹாது ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவி ஜனுஷி காவைப் பாராட்டி நாடாளுமன்ற உறுப் பினர் ரீ.கலைய ரசன் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் மற்றும் பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

# தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்துப் பேச்சு

(மஸ்கெலியா நிருபர்)

அக்கரப்பத்தனை வெவர்லி தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் தோட்ட முகாமையாளருடனான பேச்சு ஒன்று ஹட்டன் உதவி தொழில் ஆணையா ளர் அலுவலகத்தில் நேற்று (07) இடம் பெற்றது.

இந்தப் பேச்சில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். பிலிப், நிதிச் செயலாளர் சோ. ஸ்ரீதரன், தொழிற்சங்க முக்கியஸ்தர் டாக்டர். அ.நந்தகுமார், தொழிலுறவு அதிகாரி சிங்கராயர், டயகம பணிமனை உத்தி யோகத்தர் திருமதி ராஜேஸ்வரி, வெவர்லி தோட்ட முகாமையாளர் அத்தநாயக்க, உதவி தொழில் ஆணை யாளர் அமரதி லக்க மற்றும் தொழிலாளர் தேசிய சங் கத்தின் வெவர்லி தோட்டப் பிரிவுகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்ற வெவர்லி தோட்டத் தேயிலை தொழிற் சாலையை விரைவில் திறப்பதற்கான நடவடிக்கை குறித்து அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு ஒன்றை மேற் கொள்வது,

தேயிலைத் தொழிற்சாலையில் இதுவரை வேலை செய்தவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகளை ஏற் படுத்தி கொடுத்தல்,

ஏனைய பிரச்சினைகள் குறித்து தோட்டத் தலைவர்கள் தோட்ட முகாமை யாளருக்கும் இடையில் தோட்டக் அலு வலகத்தில் பேச்சு நடத்தி அதன் ஊடாக பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல்,

இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்க விட்டால் மீண்டும் ஒரு பேச்சு ஹட்டன் உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் மேற் கொள்ளல் போன்ற விடயங்கள் குறித்து இதன்போது பேசப்பட்டது.

# கிழக்கு மாகாணக் குழு இந்தியாவுக்குப் பயணம்

(அபு அலா)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமா னின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இந்தியாவுக்கு உத் தியோகபூர்வ விஜயத்தை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர் தலை மையிலான ஒரு குழுவினர் செவ்வாய்க்கிழமை (05) மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின்போது, மதுரையில் அமையப்பெற்ற மிக முக்கிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள் போன்ற பல இடங்களை பார்வையிட்டு அங்கு மேற்கொள்ளும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை பார்வையிடவுள்ளனர்.

அவை தொடர்பான விடயங்களை அறிந்து கொண்டு, கிழக்கு மாகாணத்தில் அந்த அபிவிருத்தி விடயங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தவது என்பது தொடர்பிலும் ஆராயவுள்ளனர்.

இதன் மூலம் கிழக்கு மாணத்தை முன்னேற்ற மடையச் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலா ளர் ஏ.மன்சூர், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி யு.கவிதா உள்ளிட்ட அதிகாரிகள் பயணமாகியுள்ளனர்.



# புதிய அதிபர் நியமனம்

(ஹஸ்பர்)

திஹாறிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் புதிய அதி பராக ஏ.ஜெ.எம்.பர்காண் கடமைகளைத் திங்கட்கிழமை (04) பொறுப்பேற்றார்.

அவர் இதுவரை கொழும்பு ஹமீத் அல் ஹுசைனியா தேசிய பாடசாலையின் பிரதி அதிபராகவும், பாதுக்கை முஸ்லிம் மகாவித்யாலயத்தின் பிரதி அதிபராகவும், மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலை, கல் எலிய அலிகார் மத்தியகல் லூரி, பாணந்துரை அளவியா பாடசாலைகளில் அதிபராக வும் கடமையாற்றியுள்ளார்.

தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளராகவும் பணி யாற்றி வருகிறார்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.09.2023




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை வேறு நாளைக்கு தள்ளிப் போடவும். மனதில் நல்லதையே நினையுங்கள்.

பாராட்டுகளை எதிர்பார்க்காமல் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்களிடம் நேர்மறையான அணுகுமுறை இருக்க வேண்டும்.

இன்று உங்கள் மனநிலையை மாறுபடாத வகையில் வைத்துக் கொள்ள வேண்டும். இது உங்களுக்கும் உங்கள்துணைக்கும் இடையே மகிழ்ச்சியை உருவாக்கும்.

அதிக பணத்தை சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்பே உள்ளது.உங்கள் செலவை கட்டுப்படுத்த வேண்டும்.

சளி மற்றும் வறட்டு இருமல் போன்ற பாதிப்புகள் காணப்படும்.குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று பொறுமையுடன் இருப்பதன் மூலம் வெற்றி காணலாம்.நீங்கள்செய்யும் எந்த செயலிலும் உறுதியுடன் இருக்க வேண்டும்.

உறுதி மற்றும் தைரியம் மூலம் நீங்கள் வெற்றிகளை அடையலாம்.இன்று உங்கள்பணிகளை அவ்வளவு எளிதாக செய்துவிட முடியாது.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வரலாம்.இதனால் உங்கள் இருவருக்கும் இடையே பிணைப்பு அதிகரிக்கும்.

இன்று குறைந்த முன்னேற்றமே காணப்படும். அதிர்ஷ்டத்தைவிட கடின உழைப்பையே நம்ப வேண்டும்.

தோல் எரிச்சல்கள் ஏறபலாம்.எண்ணெய் பதார்த்தங்களை எடுத்துக்கொள்வதை தவிர்க்கவும்.




இன்றைய நாள் அவ்வளவு சாதகமாக இருக்காது.இன்று அமைதியுடன் மனதில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டியது அவசியம்.இன்றைய நாளை அனுசரித்து மிடுக்கான போக்குடன் செலுத்த வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகளை செய்ய நேரலாம். இன்று பணியில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் அன்பாக அமைதியாக அனுக வேண்டும்.அவர்களை நன்கு புரிந்துகொண்டால் அவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பார்கள்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.எனவே பணத்தை கையாள்வதில் கவனம் செலுத்துவது நல்லது.

இன்று பதட்டமாக காணப்படுவீர்கள்.இம்மாதிரியான பாதுகாப்பின்மை உணர்வுகள் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக இருக்கும்.நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும்.இன்று உற்சாகமாக இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இன்று உங்கள் பணியில் நல்ல ஆதாயம் கிடைக்கும்.உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.நீங்கள் திருப்தியுடன் இருப்பீர்கள்.

இன்றைய நாளை உங்கள் துணையுடன் சேர்ந்து மகிழ்வுடன் அனுபவிப்பீர்கள். உங்கள் துணையுடன் சில புதிய நபர்களை சந்திப்பீர்கள். உங்கள் வாழ்வில் புதிய அத்தியாயம் இன்று ஆரம்பித்தது போல உணர்வீர்கள்.

இன்று வருவாய் அதிகரித்துக் காணப்படும். நீங்கள் சம்பாதித்த பணத்தை ஆக்கப்பூர்வமான சொத்துக்களாக மாற்றுவீர்கள்.

இன்று தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் போற்றத்தக்க நாளாக இருக்கும்.உங்கள் நேர்மையான முயற்சி மூலம் அதிசயங்களைக் காணலாம்.உங்களை ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

உங்கள் பணியில் அனுசரனையான போக்குகள் காணப்படும். உங்கள் பணிகள் அனைத்தும் திட்டமிட்டபடி செல்லும். எனவே நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

இன்றைய நாளை உங்கள் துணையுடன் மகிழ்வுடன் கொண்டாடுவீர்கள்.உங்கள் மனதில் திருப்தி நிலவும்.உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

இன்று அதிக அளவு பணம் சம்பாதிப்பீர்கள். பயனுள்ள பங்குகளில் பணத்தை முதலீடு செய்வதற்கு பயன் படுத்துவீர்கள்.




உங்கள் மனதில் கவலைகள் காணப்படும்.ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும்.

பணியில் மிகுந்த கவனம் தேவை. அது இருந்தால் மட்டும் தான் நீங்கள் உங்கள் எஜமானரிடம் நல்ல பெயர் சம்பாதிக்க முடியும்.

உங்கள் துணையிடம் அகந்தையான போக்கில் நடந்து கொள்வதை தவிர்க்கவும்.இதனால் நல்ல உறவு முறையை பராமரிக்க முடியும்.

உங்கள் பணத்தை கவனமாக கையாள வேண்டும். பயணம் செய்யும் போது பணத்தை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அதிகமாக கவலைப்படாமல் அமைதியாக இருங்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.




இன்று குறைந்த அளவு அனுகூலமே காணப்படும்.அதிர்ஷ்டத்தை விட முயற்சியில் நம்பிக்கை வைக்க வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும்.ஓய்வு கிடைப்பது கடினமாக இருக்கும். உங்கள் பணிமுறைகளை திட்டமிட்டுச்செய்யவும்.

உங்கள் குடும்பத்தில் இருக்கும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையிடம் ஆரோக்கியமான உறவுமுறையை பராமரிக்க இயலாது.விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று அதிக செலவினங்களை எதிர்கொள்வீர்கள்.இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.உங்கள் செலவுகளை முடிந்த அளவு கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று அசௌகரியமாக உணர்வீர்கள்.




உங்கள் இலக்குகளை முடிக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.இன்று வளர்ச்சி காணப்படும்.இன்று முக்கியமான முடிவுகள் எடுக்குமளவிற்கு மனம் தெளிவுடன் காணப்படும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் ஆற்றிய பணிக்காக உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நன்மை பயக்கும் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் நல்ல புரிந்துணர்வு வெளிப்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும்.உங்கள் நிதியை வளர்ப்பதற்கான ஆற்றல் உங்களிடம் இருப்பதாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் -08.09.2023




இன்று சிறப்பான நாள். உங்கள் செயல்களில் நல்ல முடிவுகளைக் காணலாம்.இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதில் உறுதியாக இருப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலைமை காணப்படும்.மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள்.புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் நல்ல தொடர்பாடலை பரிமாறிக் கொள்வீர்கள். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரலாம்.

ஆரோக்கியம் சீராக இருக்கும்.தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வளர்ச்சியை தக்க வைத்துக் கொள்ள விழிப்புணர்வு அவசியம். யதார்த்தமான அணுகுமுறை அவசியம்.முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல முறையில் தொடர்பு கொள்ள மாட்டீர்கள்.இதனை சரிசெய்வதன் மூலம் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ளலாம்.

இன்று அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு நேரலாம்.பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

பற்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். உண்ணும் உணவில் கவனம் தேவை.




இன்று வாழ்க்கையின் சாரம் என்ன என்பதை புரிந்து கொள்வீர்கள். மனதில் கவலைகள் காணப்படும். பிரார்த்தனை- மந்திர ஜபங்கள் போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை ஆற்றும் பொழுது சிலசமயங்களில் பொறுமை இழப்பீர்கள்.முயற்சி செய்யுங்கள். கவனம் சிதறாத வகையில் பணிகளை ஆற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். சூடான விவாதங்களை தவிர்த்து விடவும்.

இன்று பண வளர்ச்சி சிறப்பாக இருக்காது. உங்களிடம் போதிய பணம் மட்டுமே காணப்படும்.

இன்று தொண்டை வலி காணப்படலாம். அதனால் உங்களுக்கு கவலை ஏற்படும்.




இன்று நீங்கள்விரைந்து செயலாற்றுவீர்கள்.உங்களிடம் காணப்படும் பேரார்வமே இதற்குக் காரணம். உங்கள் நலனுக்கான பயனுள்ள முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

உங்களிடம் சிறந்த தகுதி காணப்படும். நீங்கள் சிறந்த முறையில் பணியாற்றுவீர்கள். உங்கள் பணிக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு மேம்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் சேமிப்பு உயரும்.இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களிடம்அதிக ஆற்றல் காணப்படும். இன்று சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.உங்களின் மகிழ்ச்சி காரணமாக ஆரோக்கியமாக இருப்பீர்கள்.







# மத்திய அரசைக் கண்டித்து ரயில் மறியல் போராட்டம்!





## - 800 பேர் கைது

மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் மாநிலம் தழுவிய ரயில் மறியல் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மதுரையில் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தலைமையில் ரயில் நிலையம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது 800 இற்கும் மேற்பட்டோர் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க. அரசு பெட்ரோல், டீசல் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் விலையை குறைக்க வேண்டும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் மறியல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில். இன்று மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பி னரும், மதுரை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான சு.வெங்கடேசன் தலைமையில் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. மாநிலக்குழு உறுப்பினர் ரா.விஜயராஜன், மாவட்டச் செயலாளர் மா.கணேசன் உள்ளிட்ட 800 இற்கும் மேற்பட்டோர், பெரியார் பேருந்து நிலையம் அருகிலுள்ள கட்டபொம்மன் சிலையிலிருந்து ரயில் நிலையத்திற்கு பேரணியாக சென்றனர்.

அவர்களை பொலிஸார் ரயில் நிலையத்துக்குள் செல்லாமல் தடுத்து நிறுத்தினர்.

இதனால் கட்சி உறுப்பினர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. பின்னர் வீதியில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். இதனையடுத்து பொலிஸார் சுமார் 800-க்கும் மேற்பட்டோரை கைது செய்து வாகனத்தில் ஏற்றினர்.

அதேபோல், திருப்பரங்குன்றத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் முத்துக் கண்ணன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் 23 பெண்கள் உள்பட100 பேர் கலந்து கொண்டனர்.

# தமிழக அமைச்சர் உதயநிதியின் உருவ பொம்மை எரிக்க முயற்சி!



சனாதன தர்மத்துக்கு எதிராக கருத்து தெரிவித்து இந்து மதத்தை இழிவுபடுத்தினார் என கூறி, தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் உருவ பொம்மையை திருவண்ணாமலையில் எரிக்க முயன்ற இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சனாதன தர்மத்துக்கு எதிராக கருத்து தெரிவித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை கண்டித்து இந்து முன்னணி சார்பில் திருவண்ணாமலை சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகம் அருகே நேற்று மாலை கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெ டுக்கப்பட்டிருந்தது.

நகரத் தலைவர் நாக.செந்தில் தலைமையில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் பலர் பங்கேற்று அமைச் சர்கள் சேகர்பாபு மற்றும் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை கண்டித்து கண்டன கோஷம் எழுப்பினர்.

இதன்போது, பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸ் துணை கண்காணிப் பாளர் குணசேகரன் தலைமையிலான பொலிஸார், கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி கிடையாது என தெரிவித்தனர். மேலும், ஆர்ப்பாட்டத்தை முடித்து கொள்ள வேண்டும் என எச்சரித்தனர். இதனால் இரண்டு தரப்புக் கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதற்கிடையில், மறைவாக வைத் திருந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் உருவ பொம்மையை கொண்டு வந்து மாவட்ட பொது செயலாளர் வழக்கறிஞர் இரா.அருண் குமார் தீயிட்டு எரிக்க முயன்றார். இதையறிந்த பொலிஸ ார், உருவ பொம்மையை கைப்பற்ற முயன்றும் பலனில்லை. இருப்பினும், உருவ பொம்மையை கீழே போட்டு இந்து முன்னணியினர் மிதித்தனர். பின்னர், நீண்ட போராட்டத்துக்குப் பின்னர், உருவ பொம்மையை பொலிஸார் கைப்பற்றினர்.

# உக்ரைனுக்கு இராணுவ உதவிகள்: அமெரிக்கா மீண்டும் அறிவித்தது!



உக்ரைனுக்கு மேலும் 175 மில்லியன் ரூபா பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கவுள்ளோம் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த இராணுவ ஆயுத தொகுதியில் ரஷ்ய விமானங்கள் மற்றும் ஏவுகணைகளுக்கு எதிராக செயற்படும் ஆயுதங்கள் உள்ளடங்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான போர் இடம்பெற்று வரும் நிலையில் உக்ரைனுக்கு உதவும் முகமாக குறித்த தொகை வழங்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரேசிலில் பெரும் புயல் தாக்கம்: உயிரிழந்தோர் எண்ணிக்கை உயர்வு!



பிரேசிலில் ஏற்பட்ட புயலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

பிரேசிலின் தெற்கு பகுதிகளில் உள்ள மாகாணங்கள் புயலால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் காரணமாக பெய்த கனமழையால் ஆறுகளில் நீர் மட்டம் அதிகரித்து நகரின் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கடும் வெள்ளத்தில் சிக்கிய மியூகம் நகரின் பல அடுக்குமாடி குடியிருப்புகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அங்கு ஒரே வீட்டில் 15 பேரின் உடல்களை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்நிலையில், பிரேசிலை தாக்கிய புயலால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரபூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், இந்த சம்பவத்தால் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

புயலில் வீடுகள் அடித்து செல்லப்பட்டதால் 2,300 பேரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

## இருப்பிடங்களை இழந்த 50 லட்சம் மக்கள்!



சூடானில் இடம் பெற்று வரும் உள்நாட்டு மோதல் காரணமாக இதுவரை 50 லட்சம் பேர் தங்களது இருப்பிடங்களை இழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம் பெயர்ந்தவர்களில் 40 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டிலேயே ஏதிலிகளாக காணப்படுகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 7.5 லட்சம் பேர் சர்வதேச ஏதிலிகளாக காணப்படுகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் எகிப்து, சாட் போன்ற நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

சூடான் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் இதுவரை வெற்றி பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூடானில் 32 பொதுமக்கள் உயிரிழப்பு

சூடான் இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல்களில் 32 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் போர் ஆரமபமத்தில் இருந்து நாள் ஒன்றில் பதிவாகிய அதிகபட்ச உயிரிழப்பு எண்ணிக்கை இதுவென்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், சூடானில், ஒம்பாடா பகுதியில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதல்களில் மேலும் பல பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

சூடான் படைகளுக்கும் துணை இராணுவ விரைவு ஆதரவுப் படைகளுக்கும் இடையே கடந்த ஏப்ரல் மாதம் மோதல் ஆரம்பித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மியன்மாரில் நிலநடுக்கம்!

மியன்மாரில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மியன்மாரில் நேற்று காலை 10.29 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நேற்று ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆகப் பதிவாகியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது..

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

# மலையக மக்களுக்கு காணி உரிமை: ஜீவன் தலைமையில் கலந்துரையாடல்



மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்கான பொறிமுறை தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண, நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, காணி அமைச்சின் செயலாளர், காணி மறுசீரமைப்பு குழுவின் தலைவர், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, காணி விவகார ஆணையாளர் மற்றும் துறைசார் அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் அல்ல, பெருந்தோட்டங்களில் உள்ள அனைவருக்கும் காணி உரிமை அவசியம் என இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் எடுத்துரைத்துள்ளார்.

அதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. அது துரிதப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்டப்பகுதிகளில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கும் காணி உரித்து பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# தொழில் முயற்சிகளுக்கு இலவச வவுச்சர்கள்







(ஹஸ்பர்)

பெரண்டினா லைப் லைன் பயனாளர்களுக்கு தொழில் முயற்சிகளுக்கான 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான இலவச வவுச்சர்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (04) மாலை வெருகல் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் பெரண்டினா லைப் லைன் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.

பெரண்டினா சேருநுவர கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 40 பயனாளிகளுக்கு பண வவுச்சர்கள் வழங்கப்பட்டன.

வெருகல், மூதூர், சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 109 பயனாளிகளுக்கு இந்த வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வெருகல் பிரதேச சபையின் பிரதிச் செயலாளர் எஸ். தவமுரளிதரன், சேருநுவர பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி ஐ.பி.ஹேரத், பெரண்டினா நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் திருச் செல்வம், சேருநுவர கிளையின் முகாமையாளர் பா.வதனன் மற்றும் பெரண்டினா லைப் லைன் நிறுவனத்தின் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் முன்னெடுக்கும்

# தெய்வீகத் திருக்கூட்டம்



இடம் - நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம், நல்லூர்
காலம் - 08.09.2023 வெள்ளிக்கிழமை, மாலை 4.15 தொடக்கம் 8.15 வரை

## திருமுன்னிலை

வணக்கத்திற்குரிய
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்

வணக்கத்திற்குரிய
ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்,
சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர், ஹவாய் சைவ ஆதீனம், அமெரிக்கா

## தலைமை

சிவஸ்ரீ கைலாசநாத வாமதேவக் குருக்கள்
நயினாதீவு, நாகபூசணி அம்மன் ஆலயம்

## பிரதம அதிதி

திரு.கதிர்காமர் திருக்குமார்,
பிரதம பொறியியலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

## சிறப்பதிதி

திரு.சி.ரமணராஜா,
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துக் கற்கைகள் பீடம்,
யாழ்.பல்கலைக் கழகம்

Build Your Dream home with us

NORTH WALL
ENGINEERING

Nelliyady, Jaffna.

Our Recent Projects



"Experience a professional service like no other"

Our Services
- Architectural Designing.
- Structural Planning.
- 2D & 3D Drawing.
- BOQ Assessment.
- Interior Designing.
- Landscaping.

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766